# கிராமிய விளையாட்டுக்கள்

11099

தொகுப்பு : ரஜிதா அரிச்சந்திரன்
கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்



வெளியீடு:
பிரதேச செயலகம் யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமிய விளையாட்டுக்கள்

11099

வெளியீடு:
பிரதேச செயலகம்,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச செயலகம் - யாழ்ப்பாணம்
# ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය - යාපනය
# Divisional Secretariat - Jaffna

பிரதேச செயலாளர் / ප්‍රාදේශීය ලේකම් / Divisional Secretary — 021 221 6135, dsjaffnadevelop@gmail.com
உதவி பிரதேச செயலாளர் / සහකාර ප්‍රාදේශීය ලේකම් / Asst. Divisional Secretary — 021 221 7386, adsdsjaffna@gmail.com
உதவி திட்டமிடல் பணிப்பாளர் / සහකාර අධ්‍යක්ෂ - සැලසුම් / Asst. Director of Planning — 021 222 7536, adplanjaffnads2016@gmail.com
கணக்காளர் / ගණකාධිකාරී / Accountant — 021 222 5425, accjaffna@gmail.com
நிர்வாக உத்தியோகத்தர் / පරිපාලන නිලධාරී / Administrative Officer — 021 222 2209, dsjaffnaeb2016@gmail.com
கிராம உத்தியோகத்தர் (நிர்வாகம்) / ග්‍රාම නිලධාරී (පරිපාලන) / Grama Niladhari (Administration) — 021 221 7840
சமுர்த்தி முகாமையாளர் (தலைமையகம்) / සමෘද්ධි කළමනාකරු (මූලස්ථාන) / Samurdhi Manager (Head Quater) — 021 222 4520, samurdhi.jaffnads@gmail.com
மேலதிக மாவட்ட பதிவாளர் / අතිරේක දිස්ත්‍රික් රෙජිස්ට්‍රාර් / Addl. District Registrar — 021 221 4103, adrjaffna@gmail.com
பொது / පොදු / General — 021 221 7387
தொலைநகல் / ෆැක්ස් / Fax — 021 222 1035


# பாரம்பரிய கிராமிய விளையாட்டு நூல் உருவாக்கத்திற்கான வாழ்த்து இயம்புதல்



இப்புவியில் வசிக்கும் இனங்கள் எண்ணில் அடங்கா. ஒவ்வொரு இனத்தவர்களும் அவர்களுக்கென உள்ள பாரம்பரியங்களை பின்பற்றி வருகின்றனர். கல்தோன்றி மண்தோன்றாக்காலத்தில் தோன்றிய நம் மூத்த குடியினரான தமிழினத்தில் பாரம்பரிய கலாசாரம், உணவு, உடை, விளையாட்டுக்கள் அனைத்தும் பின்னிப்பிணைந்து காணப்பட்டது. வீரமும் விவேகமும் கொண்ட நம் தமிழின பாரம்பரியத்தை ஒவ்வொரு மனிதனும் அறிந்துகொள்வது அவசியமாகும். அந்த வகையில் தனிச்சிறப்பையும், தனித்தன்மைகளையும் கொண்டமைந்த பாரம்பரிய கிராமத்து விளையாட்டுக்கள் எனும் இந்நூல் உருவாக்கத்திற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமிதம் கொள்கிறேன்.

இன்றைய தலைமுறையினருக்கு விளையாட்டு என்றாலே உதைபந்து, கிரிக்கெட்டின் தாக்கம் அதிவேகமாகப் பரவியுள்ளது. ஏனையவற்றில் நாட்டம் குறைவடைந்தள்ளது. கிராமத்து விளையாட்டுக்களில் வீட்டினுள் விளையாடுவது ஒருவகை, வீட்டிற்கு வெளியே சென்று ஆடுபுலியாட்டம் ஆடுவது இன்னொருவகை. அந்த வகையில் கபடி, ஜல்லிக்கட்டு, உறியடித்தல், வழுக்குமரம், சிலம்பாட்டம், பச்சைக்குதிரை, பம்பரம், புளியங்கொட்டை, கள்ளன்பொலிஸ் இவை சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் விளையாடும் விளையாட்டாகும். பல்லாங்குழி, தாயம், சில்லுக்கோடு, கும்மி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலாட்டம், பாண்டி, கண்ணாமூச்சி, குலைகுலையாய்முந்திரிக்காய், எலியும் பூனையும். ஒருகுடம் தண்ணியூற்றி, பூப்பறிக்க வருகிறோம், கரகரவண்ணடி, கிச்சுக்கிச்சுத்தாம்பூளம், சில்லுக்கோடு, என்பன சிறுமியர் மற்றும் குமரிப்பெண்களுக்கான விளையாட்டாகவும் இருந்து இற்றைக்கு 15 வருடங்களிற்கு முன்னர் சிறுவர் சிறுமியர் கூட்டம் கூட்டமாக விளையாடிக் கொண்டிருப்பதைக் காணமுடிந்தது. ஆகையால் தற்போது தொலைக்காட்சியின் ஆக்கிரமிப்பு மற்றும் கல்வி நிலையில் போட்டி ஏற்பட்ட சில காரணங்களால் இத்தகைய பழமைவாய்ந்த சுவாரசிய மான விளையாட்டுக்களை கண்ணால் காணக்கூட முடிய வில்லை என்பதுதான் மனவேதனை.

சிறுவர்களின் உலகத்தை இப்போதெல்லாம் காட்டுன் சனல்களும், கணினி, கைத்தொலைபேசி, வீடியோ விளையாட்டுக்களும் ஆக்கிரமித்து அவர்களது உடல் உள பாதிப்பினை ஏற்படுத்துவனவாக அமைகின்றன. இவ்விளையாட்டுக்களை கதைகளில் மட்டுமே அறிந்து கொள்ள முடிகின்றது. எனினும் பண்டைய விளையாட்டுக்கள் மனிதவாழ்வோடு தொடர்புபட்டு பின்னிப்பிணைந்ததாக, வாழ்வை ஒழுங்குறுத்துவனவாக அமைகின்றது. ஏற்றமும் இறக்கமும் வாழ்க்கையில் உள்ளது என உணர்த்தியது **பரமபதம்**, எண்ணிக்கையில் கூட்டலையும் பெருக்கலையும் விளையாட்டாக கற்றுக்கொடுத்தது **கிட்டிப்புல்**, வெட்டவெளியில் எறிந்தாலும் மீண்டும் தொடக்கத்திலிருந்து துவக்கிவை என இலக்கை அடையச் சொல்லிக் கொடுத்தது **தாயம்,** ஒழிந்தவர்களைக் கண்டுபிடிக்கும் பொறுமையும் ஒழிந்து தனிமை பெருமையும் பெற்றுத்தந்தது **ஐஸ்பால்**, சமமாக இல்லாது ஊனமாக இருந்தாலும் சாதிக்க வேண்டும் என நெறியூட்டியது **நொண்டி**, இருக்கும் இடத்தில் எடுத்து இல்லாதவிடத்து நிரப்பும் குணம் பதிந்தது **பல்லாங்குழி** என்று வாழ்க்கையை எளிமையாகவும் நேர்மையாகவும் மிகவும் சந்தோசமாகவும் விட்டுக்கொடுத்தும் பொறுமையுடன் வாழும் எம்மவர்களின் விளையாட்டுக்கள்பல இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே இளையோருடைய உடல், உள ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கு இத்தகைய கிராமிய விளையாட்டுக்கள் பெரிதும் உதவுகின்றது. அருகிப்போய்வருகின்ற இத்தகைய விளையாட்டுக்களை எமது சமூகத்தினரிடையே மீளவும் கட்டியெழுப்பி அவர்களுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரோக்கியத்தைப் பேணவும் , சமூக ஒற்றுமை மற்றும் பண்பாட்டு விழுமியங்கள், மரபுகள் , பழக்கவழக்கம் என்பவற்றை பேணவும் இவ்விளையாட்டுக்கள் உறுதுணையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. மீளவும் இத்தகைய விளையாட்டுக்களை கட்டியெழுப்புவதன் மூலம் எமது சமூகத்தில் சிறந்ததொரு எதிர்கால சந்ததியினரை உருவாக்க முடியும் அந்த வகையில் கிராமிய விளையாட்டுக்கள் எனும் இந்நூலின் வருகையானது காலத்தின் தேவை கருதி வெளிவரும் ஒரு நூலாகவே விளங்குகின்றது. இவ்வாறான முயற்சிகள் மேலும் தொடர எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதுடன். கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் எமது பிரதேச செயலகத்தினால் வெளியிடப்படுகின்ற இக்கைநூலினை அச்சுருவாக்கம் செய்ய உதவி புரிந்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்து கொள்கின்றேன்.


நன்றி

**எஸ். சுதர்சன்,**
பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



யாழ்ப்பாண பிரதேசத்துக்குரிய தனித்துவமான கிராமிய விளையாட்டுகளை அடையாளம் கண்டு மக்கள் மயப்படுத்துவதை நோக்கமாக் கொண்டு பிரதேச செயலாளரின் கண்காணிப்புடன் பிரதேச கலாசார செயற்குழுவின் ஒத்துழைப்புடன் பிரதேச கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தரினால் இக்கிராமிய விளையாட்டுக் கைநூல் தொகுக்கப்பட்டுள்ளமை பெருமைக்குரியதே.

கிராம மட்டத்திலுள்ள அழகிய சிறுவர் சமூகத்தின் பிள்ளைகளுக்கு கிராமிய விளையாட்டு தொடர்பில் பொதுவான விளக்கமின்மை காணப்படலாம் எனவே இந்நூலூடாக பொது மக்களுக்கும் சிறுவர்களுக்கும் போதிய விழிப்புணர்வு கிடைக்கும் வகையில் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வழிகாட்டலில் யாழ்ப்பாண மாவட்டத்தின் 15 பிரதேச செயலாளர் பிரிவுகளில் யாழ்ப்பாண பிரதேச செயலகத்தினால் முதல் முதலாக வெளியீடு செய்யப்படுகின்றமை மகிழ்ச்சியளிக்கின்றது.

யாழ்ப்பாண பிரதேச சிறுவர்கள் எதிர்காலத்தில் கிராமிய விளையாட்டுகளை விளையாடி கூடிமகிழ சந்தர்ப்பம் ஏற்படுத்தி கொடுத்த அனைவருக்கும் எனது வாழ்த்துக்களும் நன்றிகளும்.

**திரு.இ.கிருஸ்ணகுமார்,**
மாவட்ட கலாசார உத்தியோகத்தர்,
மாவட்டசெயலகம்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



விளையாட்டானது ஒரு பண்பாட்டின் முக்கிய கூறாக விளங்குகின்றது. தமிழர் பண்பாட்டில் காணப்படும் பல விளையாட்டுகள் உடல் விருத்தி, உளவிருத்தி, அறிவு விருத்தி, உறவு விருத்தி என்பவற்றை நோக்கமாகக் கொண்டே உருவாக்கப்பட்டன எனலாம். விளையாட்டுகள் சமூகத்தை ஒன்றிணைக்கும் கருவியாகவும் விளங்குகின்றன. விளையாட்டில் ஈடுபடுவது மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் கொடுக்கின்றது.

விளையாட்டின் முக்கியத்துவத்தை உளவியல் துறை உணர்ந்துள்ளது. இதனால் விளையாட்டு உளவியல் (Sports Psychology), விளையாட்டு வழி உளக்குணமாக்கல் முறை (Play therapy) என்பன உளவியல் துறையில் தனித்துவமான பிரிவுகளாக வளர்ந்து வருகின்றன. விளையாட்டு உளவியலானது உளவியல் நுட்பங்களைப் பயன்படுத்தி விளையாட்டு ஆற்றுகையை மேம்படுத்துவதற்குப் பங்களிப்புச் செய்கின்றது. விளையாட்டு வழி உளக்குணமாக்கல் முறையான விளையாட்டின் ஊடாக உளநலப் பிரச்சினைகளைக் குணமாக்கி உளநலனை மேம்படுத்தி வருகின்றது.

தமிழ் சமுதாயத்தில் கிராமிய விளையாட்டுகளும் மேற்குறிப்பிட்ட பல நலன்களைக் கருத்தில் கொண்டே உருவாக்கப் பட்டன. இவற்றை விளையாடும்போது கிராம மக்கள் ஒன்றாகவோ அல்லது சிறுசிறு குழுக்களாகவோ ஒன்று கூடுகின்றனர். ஒருவருக் கொருவர் உற்சாகமும் ஊக்கமும் கொடுக்கக் கற்றுக்கொள்ளுகின்றனர். வெற்றி பெற்றவரை வாழ்த்தக் கற்றுக்கொள்கின்றனர். தோல்விகளை நல்ல மனப்பான்மையோடு ஏற்று அதிலிருந்து பாடங்களைக் கற்று வெற்றி நோக்கி வீறுநடைபோடக் கற்றுக்கொள்கின்றனர். வெற்றி பெறும்போது மகிழ்ந்து கொண்டாடக் கற்றுக்கொள்கின்றனர்.

கடந்த காலத்தில் தமிழ் சமுதாயத்தின் வளர்ச்சிக்கு கிராமிய விளையாட்டுகள் பெரும் பங்காற்றி வந்துள்ளன. ஆனால் யுத்தத்தின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் இவற்றின் முக்கியத்துவம் குறைந்து வருவதை அவதானிக்க முடிகின்றது. தற்போது கிராமங்களில் சிறுவர்கள், இளைஞர் போன்றோர் விளையாட்டில் ஈடுபடுவதைக் காண்பது மிகமிகக் குறைவு. போட்டிகள் இடம்பெறும்போது பயிற்சி பெறுவதற்காக ஈடுபடுகின்றனரேயன்றி, அன்றாட வாழ்வின் இன்றியமையாத அம்சமாக விளையாட்டுகள் தற்போது இடம்பெறுவதைக் காண முடிவதில்லை. இதற்கு ரியூசன், கைத்தொலைபேசிக் கலாச்சாரம் என்பவே முக்கிய காரணிகள் எனலாம்.

பெற்றோரும் தமது பிள்ளைகளின் வாழ்வில் விளையாட்டின் முக்கியத்துவத்தை உணரத் தவறுவதோடு கல்விக்கு மிகை முக்கியத்துவம் கொடுக்கும் தவறான கண்ணோட்டத்தையும் கொண்டுள்ளனர். இதில் மாற்றம் தேவை. விளையாட்டுகளற்ற வாழ்வு நோயையும் உளநலப் பாதிப்புகளையும் ஏற்படுத்துவதை இவர்கள் உணர ஆரம்பிக்க வேண்டும். தவறான கண்ணோட்டத்தால் பிள்ளைகளின் உறவாடல் விருத்தியும் குன்றிப்போயுள்ளது என்பதையும் உணரச் செய்ய வேண்டும்.

வழக்கொழிந்த கிராமிய விளையாட்டுக்களைப் பாடசாலை மட்டத்திலும் கிராமிய மட்டத்திலும் அறிமுகப்படுத்தி அவற்றில் ஈடுபடுவதற்கு ஊக்கமளிக்க வேண்டும். இவற்றோடு இணைந்து இக்கிராம விளையாட்டுகள் விளைவிக்கும் நன்மைகளை உணர்த்தும் செயற்திட்டங்களும் மேற்கொள்ளப்பட வேண்டும். இது பண்பாட்டின் புதுப்பித்தலாகவும் அமையும்.


கலாசார அலுவல்கள் திணைக்களத்தினர் வழக்கொழிந்த கிராமிய விளையாட்டுகளுக்கு புத்துயிர் அளிப்பதை நோக்கமாகக் கொண்டு இந்நூலை வெளியிடுகின்றனர். இது பாராட்டத்தக்க நல்லதொரு முயற்சியாகும். இவர்கள் மேற்கொண்டுவரும் பல்வேறு நல்ல முயற்சிகள் தொடர்ந்தும் வெற்றி பெற இறைவன் அருள்கூர்வாராக.

**அருள்திரு இராசேந்திரம் ஸ்ரலின்**
M.Sc. Guidance & Counselling
இயக்குநர்
அகவொளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை



பண்டைய தமிழர்களின் வாழ்க்கை முறைமைகளை ஆய்வு செய்கின்ற போது நாகரிகத்தில் முதிர்ந்த ஒரு இனமாகவும், சிறந்த சமுக கட்டமைப்பையும் பொருளாதார முறைமையையும் கொண்டவர்களாக வாழ்ந்து ஏனைய இனத்தவர்க்கும் ஒரு முன்னுதாரணமாக இருந்துள்ளனர் என்பதை தெள்ளத் தெளிவாக அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. அவர்களின் பொழுதுபோக்கு அம்சங்களாக கிராமிய விளையாட்டுக்கள் ஊடாக கல்வியின் ஒழுக்கத்தையும், விழுமியங்களையும் கட்டிக்காத்து வந்துள்ளனர். என்பதனையும் அதனூடான மகிழ்ச்சியான ஒற்றுமையான பரஸ்பரம் விட்டுக் கொடுத்து வாழ்கின்ற பண்பையும் வளர்த்துள்ளனர்.

அந்நிய நாகரிகங்களின் எழுச்சியானது சமூகவியல் நோக்கில் கிராமிய விளையாட்டுக்களின் மதிப்பினைக் குறைத்து மேலைத்தேய விளையாட்டுக்களில் மோகம் பெறத்தொடங்கியது. கிரிக்கெற், கால்பந்து, கூடைப்பந்து என பல விளையாட்டுக்களை அறிமுகம் செய்தது மட்டுமன்றி சர்வதேச ரீதியில் அதுவே முதற்தரமானது நாகரிகமானது என்ற விளம்பரங்களால் வெற்றி பெற்ற நிலையில் கிராமிய விளையாட்டுக்கள் மெல்ல மெல்ல வழக்கொழிந்து செல்வது இன்று நிதர்சனமாகவுள்ளது.

குடும்பமாக கூடியிருந்து சமூகமாக இணைந்து ஆடி மகிழ்ந்த பல கிராமிய விளையாட்டுக்கள் மக்களிடையே பலமான ஒற்றுமையையும் திட்டமிடலையும் கல்வியையும் வளர்த்தது. நோய் நொடியற்ற வாழ்க்கையையும் சமயம் சார்ந்த விழாக்களில் மேற்கொள்ளப்பட்ட கிராமிய விளையாட்டுக்கள் இன்று இளம் தலைமுறையினரால் கைவிடப்பட்ட நிலையில் உள்ளது.

“மாற்றமொன்றே மாறாதது” என்ற வகையில் யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தராக பணிபுரியும் கவிஞர் ரஜிதா அரிச்சந்திரன் அவர்களால் மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனங்களில் ஒரு மாற்றத்தை கொண்டு வரும் வகையில் எழுத்துருவாக்கப்பட்ட இந்த நூலானது இன்றைய காலத்தின் கட்டாய தேவையாக உள்ளது. இதில் கிராமிய விளையாட்டுக்களை விளையாடும் முறை போன்றவற்றை தொகுத்து வழங்கியமை குறிப்பிடத்தக்கதாகும். இந்த முயற்சிக்கு ஒத்துழைப்பு நல்கிய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர். பிரதேச செயலாளர் ஆகியோருக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் கிராமிய விளையாட்டுக்கள் எனும் நூல் நிச்சயம் எமது சமூகத்திற்கு கிடைத்தவரப்பிரசாதமாக அமையும் என்பதில் ஐயமில்லை. இந் நூலுக்கு அணிந்துரை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

**திரு.க. இ. கமலநாதன்**
ஓய்வுநிலை விரிவுரையாளர்
தேசிய கல்வியல் கல்லூரி
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை



கிராமிய மக்கள் தமது பொழுது போக்கிற்காகப் பலவகை விளையாட்டுக்களை விளையாடி வந்திருக்கின்றனர். அந்த விளையாட்டுக்கள் மக்களுக்குப் பொழுது போக்கிற்காக மட்டுமின்றி அவர்களுடைய கலாசாரம் பண்பாட்டு விழுமியங்களைப் பறை சாற்றுவனவாகவும் அமைந்து விளங்குகின்றமை குறிப்பிடதக்கதாகும். தற்காலத்தில் பெரிதும் பரவி வருகின்ற தொற்றா நோய்கள் மனநோய்களிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்கும் பலமானவர்களாகவும் நீண்ட ஆயுள் உடையவர்களாகவும் வாழ வைப்பதற்கும் இவ் விளையாட்டுக்கள் அவசியமாகும். தற்காலத்தில் இவ் விளையாட்டுக்கள் அருகி வருவதுடன் பலரும் இவ் விளையாட்டுக்களை மறந்து விட்டனர் என்றே கூறலாம் வைத்தியர்களுடைய ஆலோசனையின்படி இவ்விளையாட்டுக்களினை மீள சிறுவர்கள் மத்தியில் அறிமுகப்படுத்துவதனூடாக அவர்களை மனரீதியாகவும் உடல்ரீதியாகவும் பலமடைய வைப்பதுடன் கலாசார விழுமியங்களுடன் வளர்க்கவும் முடியும் இதனூடாக தற்போது வேகமாக பரவிவரும் தொற்றா நோய்கள் மற்றும் மனமுடைந்து தற்கொலை செய்தல் போதைவஸ்துப் பாவனை போன்றவற்றிலிருந்தும் பிறள்வான நடத்தையிலிருந்தும் எதிர்கால சமூகத்தினைக் காப்பாற்ற முடியும் என்பதிலிருந்து இவற்றின் முக்கியத்துவத்தினை அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

இன்று இளைஞர்கள் பலருக்கு இவ்விளையாட்டுக்கள் பற்றித்தெரியாமலே இருக்கின்றது. தற்போது வாழும் முதியவர்களிடம் மட்டுமே இவ்விளையாட்டுக்கள் பற்றிக் கேட்டறிய முடிகின்றது அந்தவகையில் யாழ்ப்பாண பிரதேச செயலகப்பிரிவு இருபத்து எட்டு கிராம சேவையாளர் பிரிவுகளையும் ஐம்பத்துரெண்டு கிராமங்களையும் கொண்டதாக அமைந்துள்ளது. இங்கு வாழும் முதிய கலைஞர்கள் மற்றும் ஓய்வு பெற்ற ஆசிரியர்களுடன் கலந்துரைய போது அவர்களிடம் இருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது. அந்தவகையில் இந்த தொகுப்பினை உருவாக்கி வழங்குவதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுசரணை வழங்கிய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர், ஆலோசனையும் வழிகாட்டலும் நல்கிய பிரதேச செயலாளர், மாவட்ட கலாசார உத்தியோகத்தர், விளம்பர அனுசரணை வழங்கிய ராகஸ்வரம் கலைமன்றம், மற்றும் அழகுற அச்சிட்டுத்தந்த மெகா பிறிண்டேர்ஸ் ஆகியோருக்கு நன்றியினை தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

**ரஜிதா அரிச்சந்திரன்**
கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளடக்கம்

1. கிட்டிப்புள்
2. ஆடுபுலி ஆட்டம்
3. எவடம் எவடம்
4. கண்ணாமூச்சி
5. தாயம்
6. பாண்டியாட்டம்
7. கபடி
8. ஒப்பு
9. குலைகுலையாய்முந்திரிக்காய்
10. எலியும் பூனையும்
11. போர்த்தேங்காய்
12. தாச்சி
13. முட்டி உடைத்தல்
14. தலையணை சண்டை
15. பேணிப்பந்து
16. பட்டம் ஏற்றல்
17. கயிறு இழுத்தல்
18. அடிச்சு பிடித்தல்
19. யானைக்கு கண் வைத்தல்
20. எட்டுக்கோடு
21. படகுப்போட்டி
22. போளை எறிதல்
23. எல்லே
24. பலம்பார்த்தல்
25. கரப்பந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. கிட்டிப்புள்

இவ்விளையாட்டினைச் சிறுவர்கள் இரண்டுதடிகளைப் பயன்படுத்தி விளையாடுவார்கள். கிட்டி என்பது ஒரு முழம் நீளமுடையது அதன் ஒருமுனை கூராக்கப்பட்டிருக்கும். புள்ளு எனப்படும் மற்றைய தடியானது கிட்டியின் மூன்றில் ஒருபகுதி நீளமுடையதாக இருக்கும் அதன் இருமுனைகளும் கூராக்கப்பட்டிருக்கும்

## விளையாட்டு விதிகள்



இவ் விளை யாட்டில் இரண்டு அணிகள் இடம் பெறுவர் அவர்கள் இருவரும் தமக்குரிய எல்லையை நிர்ணயித்து வெற்றி தோல்வியை தீர்மானித்தல் என்ற வரண் முறையுடன் கிட்டிப்புள் விளையாடு வார்கள். கிட்டியால் புள்ளை அடித்தவர் பாடல் ஒன்றினை பாடிக் கொண்டே ஓடுவார். ஓடுபவன் மூச்சு விடுகின்றானா என்று பார்க்க பக்கத்தில் மற்றொருவன் ஓடுவான்.

### பாடல்

கவடியடிக்க கவடியடிக்க
கைகால் முறிய கைகால் முறியக்
காலுக்கு மருந்து தேடிக்கட்டு தேடிக்கட்டு
மாம்பட்டை மருதம்பட்டை வௌவாலோடிய தென்னம்பட்டை
பூம்பட்டை புளியம் பட்டை பட்டணம் பட்டணம் பட்டணம்
ஆலையிலே சோலையிலே ஆலங்காடிச் சந்தையிலே
கிட்டிபுள்ளும் பம்பரமும் கிறுக்கியடிக்க
பாலாறு பாலாறு பாலாறு பாலாறு
ஆலஞ்சருகு மடமடவெனவே அங்கொருவண்டி
உருண்டு வரக்காலாடிவரப் பொழுதேறிவரத் தெந்தட்டதெருத்தட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெருவெங்கும் பொறித்தட்ட பூம்பட்டை புளியம்பட்டை
வௌவாலோடிய தென்னம் பட்டை கவடிக் கவடிக் கவடிக்

**கலாசார மதிப்பு**

சிறுவர்களுக்கு மூச்சுப் பயிற்சியினையும் உடல் உறுதியையும் வழங்கி ஆரோக்கியமான சமூகத்தினைக் கட்டி யெழுப்ப உதவுகின்றது.

*****

## 2. ஆடுபுலிஆட்டம்

இந்த விளையாட்டினை விளையாடுவதற்கு இருவர் மட்டும் போதும். ஒருவர் ஆடுகளின் சார்பாகவும் ஒருவர் புலியின் சார்பாகவும் விளையாட வேண்டும். இதற்குத் தரையில் ஆட்டத்திற்குரிய



வரைபடத்தினை வரைந்து கொள்ள வேண்டும். இதில் காய்களாக கற்களையோ அல்லது புளியம் கொட்டைகளையோ பயன்படுத்தலாம் ஆடுகளின் சார்பாகப் பதினைந்து காய்களும் புலியின் சார்பாக மூன்று காய்களையும் பயன் படுத்துவார்.

**விளையாட்டு விதிகள்**

ஆடுகளுக்குரிய காய்களை வைத்து கொண்டே வர வேண்டும். அப்போது புலி ஆடுகளின் இருப்பு முறைக்கேற்ப நகர்ந்து கொண்டும் ஆடுகளை வெட்டிக்கொண்டும் வரும். புலி நகர முடியாதபடி ஆடுகள் சுற்றி வளைத்து கொண்டால் புலி தோற்றதாக கருதப்படும். ஆடுகள் அனைத்தையும் புலி வெட்டி விட்டால் புலி வெற்றி பெற்றதாக கருதப்படும். ஆடுவோரின் திறமை ஆட்டத்தின் காலத்தினை தீர்மானிக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசார மதிப்பு

விளையாடுவோருக்கு அறிவுக் கூர்மையை அதிகரிப்பதற்கும் மனதினை ஒரு முகப்படுத்தவும் உதவும்


## 3. எவடம் எவடம்

சிறுவர்கள் இணைந்து விளையாடுவார்கள். ஒரு சிறுவனின் இரண்டு கைகளையும் கட்டி அதில் மண்ணை அள்ளி வைத்து அதன் மேல் அடையாளமாக ஒரு குச்சிஅல்லது ஈர்க்குவைப்பர். மண்ணை வைத்திருக்கும் சிறுவரின் இரண்டு கண்களையும் ஒருவர் பின்னால் நின்று பொத்தியபடி அவரை முன்னும் பின்னும் சுற்றி வளைத்து கொண்டு நடப்பார். நடக்கும் போது 'எவடம் எவடம்' என்று கண்ணை பொத்தியவர் கேட்க ஏனைய சிறுவர்கள் 'புளியடி புளியடி 'என்று சொல்லிக்கொண்டு பின்னால் செல்வர். ஓரிடத்தில் மண்ணை கொட்டி விட்டு மீளவும் சுற்றி வந்து வேறோரிடத்தில் நிறுத்துவர் இறுதியில் அவர் கொண்டுவந்த மண்ணைக் கண்டுபிடிக்க வேண்டும்

கலாசார மதிப்பு

ஒற்றுமை, சகிப்புத்தன்மை, திருப்தியடைதல், உற்சாகம், பரவசம். மனத்தடையில் இருந்து விடுதலை பெறும் உணர்வு ஆகியவற்றை சிறுவர் மத்தியில் ஏற்படுத்தும்

## 4. கண்ணாமூச்சி



சிறுவர்கள் குழுவாக இணைந்து தங்களில் மூத்த வயதுடைய சிறுவனைத் தலைவனாகத் தேர்வு செய்து விளையாட்டை ஆரம்பிப்பார்கள். தலைவர் குழுவிலிருந்து ஒரு குழந்தையை தெரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வார். அக்குழந்தையை பட்டவர் எனக்கூறுவார். தலைவர் அக்குழந்தையின் கண்ணை மூடிக்கொள்ள மற்றக் குழந்தைகள் அனைவரும் ஒளித்து கொண்ட பின்னர் 'கண்ணாமூச்சிரே ரே களி முட்டை ரே ரே ஒரு முட்டையை தின்னு புட்டு ஊளை முட்டையை கொண்டு வா' என்று பாடி அக்குழந்தையின் கண்களை திறந்து விடுவர். பட்டவர் ஒளிந்திருக்கும் மற்றகுழந்கைளை கண்டு பிடிக்க வேண்டும் பட்டவரின் கண்ணில் படாமல் பதுங்கிச் சென்று தலைவரைத் தொடும் குழந்தைகள் பழமாவார்கள்.

**கலாசார மதிப்பு**

குழு உணர்வை வலியுறுத்துவதுடன் எதிரியின் கண்ணில் அகப்படாமல் பதுங்கிச் செல்லும் உத்தியினை சொல்லிக் கொடுக்கும் விளையாட்டாக அமைகின்றது.

## 5. தாயம்

இரண்டுஅல்லது நான்கு பேர் இணைந்து தாயம் மற்றும் காய்களை கொண்டு விளையாடுவார்கள். முதலில் பலகையின் மையத்திற்கு சென்று மீண்டும் ஆரம்ப புள்ளிக்கு வருவதே விளையாட்டாகும். இதற்கு புளியங்கொட்டை அல்லது தாயக் கட்டை பயன் படுத்தப்படும். தாயம் விழுந்தால் மட்டுமே



காயை அரக்க தொடங்க முடியும்.

**கலாசார மதிப்பு**

இவ் விளையாட்டின் மூலம் தந்திரமாக செயற்படுவது முன்னேறி செல்வது குழு மனப்பாங்கு குறித்து அறிந்து கொள்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. பாண்டியாட்டம் / நொண்டி

இது சிறுமிகள் தெருக்களில் விளையாடும் விளையாட்டு. ஒன்றுடன் ஒன்று இணைந்த எட்டு தொடர் பெட்டியைத் தரையில் வரைந்து முதல் பெட்டியில் கல்லை போட்டு அந்தப்பெட்டியையும் கோடுகளையும் தொடாமல் அடித்து கடைசி பெட்டிவரை சென்று திரும்பி வர வேண்டும்.

**கலாசார மதிப்பு**

சிறந்த உடற்பயிற்சி மற்றும் ஆரோக்கியமான உடலமைப்பை உருவாக்கும்.

## 7. கபடி

சதுரம் அல்லது கபடிப் பெட்டி ஒன்றினைக் கீறி அதனுள் விளையாடும் விளையாட்டு. இவ் விளையாட்டில் பதினான்கு பேர் இரண்டு அணிகளாகப் பிரிந்து ஒரு அணிக்கு ஏழு பேராக விளையாடுவார்கள். எதிர் அணியினரில் ஒருவர் இறங்கி மற்றய அணியில் உள்ளவரை தொட்டு விட்டு கோட்டுக்கு வெளியே வந்து விட்டால் தொடுகை பட்டவர் விளையாட்டில் இருந்து வெளியேற வேண்டும். மாறாக இறங்கியவரை ஏழு பேரும் சேர்ந்து பிடித்து விட்டால் இறங்கியவர் விளையாட்டிலிருந்து வெளியேற்றப்படுவார். இறங்கும்போது கபடி கபடி என பாடிக்கொண்டே இறங்க வேண்டும்.



**கலாசார மதிப்பு**

ஆடவர் பெண்களுக்கான விளையாட்டாக இருக்கின்றது. உடல் வலிமை பெறும். அவதானிக்கும் திறன் விருத்தியடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. ஒப்பு

இதில் பத்துப்பேர் இரண்டு அணிகளாகப் பிரிந்து ஒரு அணிக்கு ஐந்து பேராக விளையாடுவார்கள். இவ்விளையாட்டு விளையாடும் முறை கபடி போன்றதே இதற்கும் கபடிக்கும் உள்ள வித்தியாசம் இது வட்டத்திற்குள் விளையாடப்படுவதே ஆகும்.

**கலாசார மதிப்பு**

ஆடவர்களுக்கான விளையாட்டாக இருக்கின்றது. உடல் வலிமை பெறும், அவதானிக்கும் திறன் விருத்தியடையும்.

# 9. குலைகுலையாய் முந்திரிக்காய்

சிறுவர் சிறுமியர் இருபாலாரும் இணைந்து விளையாடும் விளையாட்டு. இதில் கலந்து கொள்பவர்கள் வட்ட வடிவில் அமர்ந்திருக்க ஒருவர் மட்டும் கையில் வைத்திருக்கும் இலையை சுழற்றி கொண்டும் "குலை குலையாய் முந்திரிக்காய் நரியே நரியே சுற்றி வா" என பாடிக் கொண்டு ஓடி வந்து அமர்ந்திருப்போர்களில் யாரோ ஒருவர் பின்னே இலையைப் போட்டுவிட்டு ஓடுவார். இலை யாருக்கு பின்னால் கிடக்கின்றதோ அவர் இலை போட்டவரை துரத்திப் பிடிக்க வேண்டும் இவ்வாறாக ஆட்டம் தொடரும்.



**கலாசார மதிப்பு**

இவ் விளையாட்டினூடாக சிறுவர்கள் மகிழ்வாக இருக்க கற்றுக் கொள்வதுடன் ஒற்றுமையாகவும் ஆரோக்கியத்துடனும் வாழ முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. எலியும் பூனையும்

சிறுவர்கள் இணைந்து வட்டமாக நின்று கொள்ள வேண்டும். எலியாகவும் பூனையாகவும் இருவர் ஆடுவார்கள். பூனையாக ஆடுபவர் வட்டத்திற்கு வெளியேயும் எலியாக ஆடுபவர் வட்டத்திற்குள்ளேயும் இருக்க வேண்டும். பலர் வட்டத்தைச் சுற்றி கைகோர்த்து நிற்கும் போது அதனூடாக புகுந்து பூனை எலியை பிடிக்க வேண்டும். பூனை "சுண்டெலியை பார்த்தீர்களா ஆமாம், எங்கே?, வீட்டுக்குள்ளே வரலாமா, வரகூடாது எனப் பாட்டு பாடிக் கொண்டே ஆடுவர்.

**கலாசார மதிப்பு**

சிறுவர் சிறுமியர்க்கு உற்சாகம் தரும் ஒன்றாக விளங்குகின்றது.

## 11. போர்த்தேங்காய்

ஆடவர்களிடையே வீர விளையாட்டாக இடம் பெறும். இதில் தேங்காயைத் தேர்ந்தெடுத்தல் உருட்டுதல் அடித்தல் என்ற வரன்முறையுடன் இடம் பெறும். இதில் இரண்டு நபர்கள் அல்லது இரண்டு குழுவினர் இடம் பெறுவர்.

**கலாசார மதிப்பு**

தமிழர் பண்டிகையில் பொது இடங்களில் இவ்விளையாட்டு இடம் பெறுகின்றது. உடலினை உறுதி செய்யும் வகையில் அமைந்த ஓர் விளையாட்டு.

## 12. தாச்சி

இதில் பதினான்கு பேர் இரண்டு அணிகளாகப் பிரிந்து ஒரணிக்கு ஏழு பேராக ஏழு பெட்டி கீறி விளையாடுவார். இவ்விளையாட்டில் அதிக பழம் எடுப்பவர்கள் வெற்றியாளராக கருதப்படுவார்கள். மறிப்பவர்களிடம் உச்சி கிளியிடம் அடி வாங்காமல் பெட்டியை கடக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கலாசார மதிப்பு

உடல் பலம் பெறும், கவனிக்கும் திறன், வெற்றி பெறும் அவா ஆகியவற்றினை உருவாக்கும்.

## 13. முட்டி உடைத்தல்

மைதானம் ஒன்றில் தடிகளால் அமைக்கப்பட்ட உயரம் ஒன்றில் முட்டியினை தொங்கவிடுவர். அதனை கண்ணைக் கட்டிச் சென்று தடியால் அடித்து உடைக்க வேண்டும். உடைத்தவர் வெற்றியாளராக கருதப்படுவார். சில இடங்களில் முட்டியினுள் காசினை வைத்திருப்பார்கள் அது உடைத்தவர்களுக்கு கிடைக்கும் பரிசாக இருக்கும்.



கலாசார மதிப்பு

அவதானிக்கும் திறன் வளரும். வருடப்பிறப்பு போன்ற பண்டிகைகளின் போது கிராமத்தினர் ஒன்று கூடி இவ் விளையாட்டினை விளையாடுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14. தலையணைச் சண்டை




உயரத்தில் கட்டை ஒன்றினைக் கட்டி அதில் இருவர் அமர்ந்திருந்து ஒரு கையை பின்னால் கட்டி ஒருகையில் தலையணை வைத்து அடிப்பார்கள். இதில் சமனிலையை இழந்து விழுபவர் தோல்வி பெற்றவராகக் கருதப்படுவார்.

**கலாசார மதிப்பு**

சிறந்த பொழுது போக்காகவும் ஆரோக்கியத்தினை உறுதி செய்யவும் உதவும்.

## 15. பேணிப்பந்து




பதினாறு பேர் இணைந்து இரு அணிகளாகப் பிரிந்து ஒரு அணியில் எட்டு பேராக விளையாடுவர்கள். மைதானத்திலோ வீட்டு முற்றத்திலோ பேணிகளை அடுக்கி வைத்து விளையாடுவார்கள். பேணியை பந்தினால் எறிந்து விழுத்தியதும் மற்றய அணியினர் பேணியை அடுக்குவர். அடுக்க விடாமல் மற்றய அணியினர் பந்தால் அடிப்பார்கள். அதைத் தாங்கி கொண்டு பேணியை அடுக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசார மதிப்பு

வலியினைத் தாங்கி வாழும் தன்மையையும் வெற்றி பெற வேண்டும் என்ற மன நிலையையும் தோற்றுவிக்கும்.

## 16. பட்டம் ஏற்றல்

காற்றுக்காலங்களில் சிறுவர்கள் பெரியவர்கள் அனைவரும் பட்டம் ஏற்றுதலில் ஈடுபடுவார்கள். ஈர்க்கு, மூங்கில், கடதாசி, ரிசு போன்ற வற்றினைப் பயன்படுத்தி "ச" பட்டம், எட்டுமுலை பட்டம், கொக்கு பட்டம், பருந்துப்பட்டம், போன்ற பட்டங்களை உருவாக்கி அவற்றினை ஏற்றுவார்கள். யாருடைய பட்டம் உயரத்திற்கு ஏறு கின்றதோ அவர் வெற்றியாளராக கருதப்படுவார். இதனை போட்டியாகவும் மகிழ்வுக்காகவும் விளையாடுவார்கள்.



கலாசார மதிப்பு

பொறுமை, படைப்புக்கலை, உடல் ஆரோக்கியம் போன்றவற்றிற்கு உதவு வதாகவும் சிறுவர் மட்டுமல்ல பெரியோர்களுக்கும் மன மகிழ்வுடன் புத்து ணர்வையும் அளிக்கும் ஓர் விளையாட்டாக அமைகின்றது.

## 17. கயிறு இழுத்தல்

தேர் இழுக்கும் வடம் போன்ற கயிறு ஒன்றினை இரண்டு பக்கமும் சம அளவிலானவர்கள் பிடித்து இழுப்பர். யார் கயிறை விடாமல் உறுதியாகப் பிடித்து வைத்திருக்கின்றனரோ அவர்கள் வெற்றி பெற்றவராகக் கருதப்படுவார்கள். இதனை ஆண்கள், பெண்கள் இரு பாலாரும் விளையாடுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலாசார மதிப்பு

உடலை உறுதிபடச்செய்யும். ஒற்றுமை உணர்வு போட்டி மனப்பாங்கினை வளர்க்கும்.

## 18. அடிச்சு பிடித்தல்

சிறுவர்கள் இணைந்து மகிழ்வுக்காக விளையாடும் ஓர் விளையாட்டு. இதில் மூன்று பேர் அடிக்க மிகுதிப் பேர் ஓடுவார்கள். அடிபட்டவர்களை ஒரு வட்டத்திற்குள் கொணர்ந்து விடுவார்கள். அடிபடாதவர்கள் அடிபட்டவர்க்கு கை கொடுத்தால் அடிபட்டவர்கள் மீண்டும் விளையாட முடியும்.

கலாசார மதிப்பு

ஒற்றுமைத்தன்மை மற்றும் உடல் வலிமைக்கும் மன மகிழ்வுக்குமான விளையாட்டாக அமைகின்றது.

## 19. யானைக்குக் கண் வைத்தல்

யானையை ஓர் பலகையில் கீறி வைத்து விட்டு யானைக்குக் கண் வைப்பவரைக் கண்ணை கட்டி சுற்றி விடுவார்கள் அவர் யானைக்கு கண் இருக்க வேண்டிய இடத்தில் கண்ணை வைத்து விட்டால் வெற்றி பெற்றவராகக் கருதப்படுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலாசார மதிப்பு

உய்த்துணரும் திறனை வளர்க்கவும் மனமகிழ்வுக்காகவும் ஆடப்படும் ஓர் விளையாட்டாகும்.

## 20. எட்டுக்கோடு

இந்த விளையாட்டினைச் சிறுவர்கள் விளையாடுவார்கள். இதனை விளையாடுபவர்களுக்கு எண்ணிக்கை வரையறை இல்லை. பங்குபற்றுபவர்கள் தனித்தனி போட்டியாளராகவே கருதப்படுவார்கள். வலதுபக்கம் நான்கு பெட்டி இடது பக்கம் நான்கு பெட்டிகளாக எட்டு பெட்டிகள் வரைந்து அதனுள் கெந்தி சென்று விளையாடுவார்கள். இதனுள் போட்டு விளையாட சிறிய ஓட்டுசில்லி பயன்படுத்தப்படும். இடது பக்க மூலையில் நின்று சில்லியை பெட்டியினுள் எறிந்து ஒரு கெந்தலில் அதனை மிதித்து விட வேண்டும். மிதித்த சில்லியை கையில் எடுத்து கொண்டு இரண்டாவது, மூன்றாவது, நான்காவது பெட்டிக்குள் கெந்தி ஐந்தாவது பெட்டிக்குள் இரண்டுகால்களையும் வைத்து நின்று விட்டு மீண்டும் ஆறாவது ஏழாவது எட்டாவது பெட்டிக்குள் கெந்தி வெளியில் போக வேண்டும். இவ்வாறாக எட்டு பெட்டியையும் விளையாடி முடிந்தால் அடுத்த கட்டம் சில்லியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பெட்டிக்குள் போட்டு கெந்தி மிதித்து அதனைக் குனிந்து கையால் எடுத்து பாதங்களின் விரல்மீது வைத்து கெந்தி சில்லி விழாத வண்ணம் பெட்டிக்கு வெளியில் வந்து விட வேண்டும். மூன்றாவது கட்டமாக சிப்பியை தலையில் வைத்து கண்ணை மூடி நடக்க வேண்டும் முதற்கால் முதற்பெட்டி யிலும் அடுத்த கால் இரண்டாவது பெட்டியிலும் வைத்து நடக்க வேண்டும் நடக்கும் போது சரியா சரியா எனக் கேட்க வேண்டும். சரியாகக் கோட்டை மிதிக்காமல் நடந்து விட் டால் ஐந்தாவது பெட்டியில் நின்று கண்ணைத் திறந்து அவதானித்து விட்டு மறுபடியும் கண்ணை மூடி நடந்து முதலாவது பெட்டிக்கு வந்ததும் கண்ணை மூடியபடி நின்று வெளியில் வீழ்த்தி விட்டு கண்ணை திறந்து கெந்தி மிதிக்க வேண்டும். அடுத்த கட்டமாக எட்டு கோட்டுக்கு முதுகை காட்டியபடி சில்லியை எறிய வேண்டும் அவ்வாறு எறியும் போது வெளியிலோ கோட்டிலோ ஐந்தாவது பெட்டியிலோ விழக் கூடாது. அது எந்த பெட்டிக்குள் வீழ்கின்றதோ அந்தப் பெட்டி எறிந்தவர்க்கு சொந்தம் அதனுள் காலாறிப் போகலாம். அடுத்தடுத்து இருவருக்கு சொந்தமான பழப் பெட்டிகள் இருக்குமிடத்து மற்றவர் அதன் மேலாகப் பாய்ந்து தான் போக வேண்டும். இவ்வாறாக விளையாடியோர் கூடிய பழங்களை பெறுகின்றாரோ அவர் வெற்றி பெற்றவராகக் கருதப்படுவார்.



**கலாசார மதிப்பு**

உடல் உறுதி, மன பலம், ஒற்றுமை, உய்த்துணரும் திறன், காலில் பலம் ஏற்படும், அறிவினை பிரயோகிக்கும் திறனைப் பெறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21. படகுப்போட்டி


கடலை அண்டி வாழ்வோர் தங்களது ஓய்வு நேரங்களில் படகுப்போட்டி வைத்து விளையாடுவார்கள். குறித்த நேரத்தில் படகுகள் தயாராக இருக்கும் விசில் ஊதியதும் படகுகள் புறப்பட்டு முதலாவதாக எல்லைக் கோட்டைத் தாண்டும் படகிற்குரியவர் வெற்றி பெற்றவராக கருதப்படுவார்.



**கலாசார மதிப்பு**

உடல் உறுதி, போட்டி மனப் பாங்கினை வளர்க்கும் ஓர் விளை யாட்டாக அமைகின்ற துடன் மகிழ்வூட்டும் நடவடிக்கையாகவும் அமையும்.

## 22. கோலிக்குண்டு /போளை எறிதல்



சிறுவர்கள் இணைந்து விளையாடுவார்கள். இதில் போளை எனப் படும் கண்ணாடி உருண்டைகள் பயன் படுத்தப்படும். ஒருவர் தனது போளையை ஒரு முனையில் வைக்க இன்னொருவர் அந்த போளையை குறிபார்த்து அடிப்பார்.

**கலாசார மதிப்பு**

சிறுவர்களின் பார்வைத் திறன் மேலோங்கும், கவனிப்பு திறன், அதிகரிக்கும் ஒற்றுமையாகவும் நேர் மனப்பாங்குடனும் வாழப் பழகுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 23. எல்லே



முப்பத்தி இரண்டு பேர் இரு அணிகளாகப் பிரிந்து ஒரு அணி துடுப்பாடும். ஒரு அணி களத் தடுப்பிலும் ஈடு படுவார். தடி ஒன்றினால் பந்தினை அடித்து விட்டு வட்டத்தினைச் சுற்றி ஓட வேண்டும். எதிரணியினர் பந்தால் எறியும்போது பந்து பட்டுவிட்டாலோ பந்து நிலத்தில் விழாமல் பந்தினை எதிரணியினர் பிடித்து விட்டாலோ அவர் ஆட்டத்திலிருந்து வெளியேற்றப்படுவார்.

### கலாசார மதிப்பு

குழுவாகச் செயலாற்றும் தன்மை, ஒற்றுமையாக வாழும் தன்மை ஏற்படும் அத்துடன் உடல் ஆரோக்கியம் மேம்படும்.

# 24. பலம்பார்த்தல்

இருவர் இணைந்து விளையாடும் விளையாட்டு. இருவர் கைகளில் தடி ஒன்றினைப் பிடித்து இழுப்பர். பலம் மிக்கவர் பலமில்லாதவரை தன்பக்கமாக இழுத்து விடுவார். இதனைத் தடி இன்றிக் கை களாலும் பிடித்து பலம் பார்ப்பார்கள். தமது ஓய்வு நேரங்களில் ஆண்கள் இவ்விளையாட்டில் ஈடுபடுவர்.

### கலாசார மதிப்பு

உடல் வலிமையை அதிகரிப்பதற்கும் மனோதிடத்தினை வளர்ப்பதற்கும் பொழுதுபோக்காகவும் இதனைப் பயன்படுத்துவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25. கரப்பந்து



கரப்பந்தாட்டம் ஆறுபேர் விளையாடுவர். நிலத்தில் பந்து படாதவாறு கரப்பந்தாட்டக் கம்பத்திற்கு மேலால் அடித்தல் வேண்டும். முதலில் இருபத்து ஐந்து புள்ளிகளை எடுப்பவர் வெற்றியாளராகக் கருதப்படுவார்.

**கலாசார மதிப்பு**

கைகள் பலம்பெறும், ஒற்றுமையுடன் வாழப் பழகுவார்கள், வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணம் உருவாகும்.

மேற்படி விளையாட்டுக்கள் யாழ்ப்பாணப் பிரதேச செயலகப் பிரிவுக்குள் புழக்கத்தில் இருந்து தற்போது அருகிவந்து கொண்டிருக்கின்றன. இவற்றின் முக்கியத்துவம் பயன்பாட்டினை உணர்ந்து மறுபடியும் அவற்றினை ஊக்குவித்தால் எதிர்கால சிறுவர்களும் பயன்பெறுவர்.

---


அனுசரணை








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org